செய்தி வெளியீடு எண்.179 நாள்: 03.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் ஆய்வக உதவியாளர் பணியிடத்திற்கு சான்றிதழ் சரிபார்ப்பு 09.04.2017 மற்றும் 10.04.2017 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~~~

31.05.2015 அன்று நடைபெற்ற ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்திற்கான எழுத்துத் தேர்விற்கான தேர்வு முடிவுகள் 24.03.2017 அன்று தேர்வுத்துறை இயக்ககத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள காலிப்பணியிடங்களுக்கேற்ப 1:5 விகிதாச்சாரப்படி, சான்றிதழ் சரிபார்ப்பிற்கான பட்டியல் தயார் செய்யப்பட்டு 01.04.2017 அன்று வெளியிடப்படுகிறது. இப்பட்டியல் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும் நடைமுறையில் உள்ள இனசுழற்சி மற்றும் விண்ணப்பதாரர்கள் அளித்திருந்த விவரங்கள் அடிப்படையிலும் மிகுந்த கவனத்துடன் தயார் செய்யப்பட்டுள்ளது.

இப்பட்டியல் தற்பொழுது நடைமுறையில் உள்ள Vertical, Horizontal Reservation முறையில், மகளிர், ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு இட ஒதுக்கீடு, 20% தமிழ்வழியில் பயின்றோருக்கான இட ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை பெற்றவருக்கும், முன்னுரிமையற்றோருக்கும் இடையேயான 1:4 என்ற விகிதாச்சாரம் ஆகியவற்றை இனச்சுழற்சி முறையுடன் கடைபிடித்து தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பட்டியல் 01.04.2017 அன்று முதன்மைக் கல்வி அலுவலகம் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலகங்களின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட உள்ளது. மேலும், www.tiruvallur.tn.nic.in என்ற இணையதளத்தில் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

சான்றிதழ் சரிபார்ப்புப் பணி 09.04.2017 மற்றும் 10.04.2017 ஆகிய இரு நாட்களில், திருவள்ளூர் மோதிலால் தெரு, டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்படும்.

மேன்மைதாங்கிய சென்னை உயர்நீதிமன்றம், நீதிப்பேராணை எண். 15438 முதல் 15440/2015 முடிய மற்றும் 15394 முதல் 15396/2015 வரையிலான வழக்குகளில் வழங்கிய இடைக்கால தீர்ப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.42 பள்ளிக் கல்வி (பக4(2)த்துறை, நாள் 06.03.2017-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி சான்றிதழ் சரிபார்ப்பின்போது பின்வருமாறு Weightage மதிபெண்கள் வழங்கப்படும்.

**I. எழுத்துத் தேர்வு : 150 மதிப்பெண்கள்**

**II. சான்றிதழ்கள் அடிப்படையிலான மதிப்பீடு**

**அ) வேலைவாய்ப்பகப் பதிவு மூப்பு : 10 மதிப்பெண்கள்**

வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து
1 ஆண்டு முதல் 2 ஆண்டு முடிய காத்திருப்பவர்களுக்கு : 2 மதிப்பெண்கள்
2 ஆண்டு முதல் 4 ஆண்டு முடிய காத்திருப்பவர்களுக்கு : 4 மதிப்பெண்கள்
4 ஆண்டு முதல் 6 ஆண்டு முடிய காத்திருப்பவர்களுக்கு : 6 மதிப்பெண்கள்
6 ஆண்டு முதல் 8 ஆண்டு முடிய காத்திருப்பவர்களுக்கு : 8 மதிப்பெண்கள்
10 ஆண்டும் அதற்கு மேல் காத்திருப்பவர்களுக்கு : 10 மதிப்பெண்கள்

**ஆ) கூடுதல் கல்வித் தகுதி : 5** மதிப்பெண்கள்

மேல்நிலைக் கல்வித் தேர்ச்சி (+2) : 2 மதிப்பெண்கள்
இளங்கலைப் பட்டம் அதற்கு மேலும் : 3 மதிப்பெண்கள்

**இ) முன் அனுபவம் (ஆய்வக உதவியாளராக) :** 2 மதிப்பெண்கள்

**மொத்த மதிப்பெண்கள் : 167 மதிப்பெண்கள்**

இப்பதவிக்கான தேர்விற்கு, விண்ணப்பிக்கும் இறுதி நாளான 06.05.2015 வரையிலான தகுதியுள்ள, 1) வேலைவாய்ப்புப் பதிவு முன்னுரிமை, 2) உயர்கல்வித் தகுதி 3)ஆய்வக உதவியாளர் பணயில் பணி அனுபவம் ஆகியவை மட்டுமே கருத்திற்கொள்ளப்படும்.
~~~~~~~

சான்றிதழ் சரிபார்ப்பு நாளன்று சமர்ப்பிக்கப்படும் அசல் ஆவணங்களில் அடிப்படையிலேயே மதிப்பெண்கள் வழங்கப்படும். சான்றிதழ் சரிபார்ப்பு நாளிற்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

ஆய்வக உதவியாளர் பணியில் பணி அனுபவத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் / கல்லூரிகளில் பணிபுரிந்த 06.05.2015 வரையிலான பணிக்காலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும், பள்ளிக் கல்வித்துறையின் கீழுள்ள பள்ளிகளில் ஆய்வக உதவியாளராக பணிபுரிந்திருப்பின் பணி அனுபவச் சான்றில், தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலரிடமும், கல்லூரிகளில் ஆய்வக உதவியாளராக பணிபுரிந்திருப்பின் பணி அனுபவச் சான்றில், தொடர்புடைய மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரிடம் மேலொப்பம் பெற வேண்டும். இத்தகைய பணி அனுபவச் சான்றுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் (மாதிரி படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது).

சான்றிதழ் சரிபார்ப்பிற்குப் பின், தகுதிபெற்ற பணிநாடுநர்களைக் கொண்டு, அவர்கள் பெற்ற எழுத்துத் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பின் போது வழங்கப்பட்ட Weightage மதிப்பெண்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தகுதிப் பட்டியல் (Merit list) தயார் செய்யப்படும். அத்தகுதிப் பட்டியலின் அடிப்படையில், நடைமுறையில் உள்ள இனசுழற்சி மற்றும் இதர உள்இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், காலிப்பணியிடங்களுக்கு தகுதியான பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தெரிவு செய்யப்பட்ட பணி நாடுநர்களுக்கு, உரிய பணி நியமன ஆணை வெளிப்படையான கலந்தாய்வின் மூலம் தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலர்களால் வழங்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் காலியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்திற்கு 31.05.2015 அன்று நடத்தப்பட்ட தேர்வின் முடிவுகள் 24.03.2017 அன்று அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், பணிநாடுநர்கள் விண்ணப்பித்தபோது அளித்த விவரங்கள் அடிப்படையிலும், நடைமுறையில் உள்ள இனசுழற்சி முறையினைப் பின்பற்றி, 1:5 என்ற விகிதத்தில், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

சான்றிதழ் சரிபார்ப்பு 09.04.2017 (ஞாயிறு) மற்றும் 10.04.2017 (திங்கள்) ஆகிய இரு நாட்களில் திருவள்ளூர், மோதிலால் தெரு, டி.ஆர்.பி.சி.சி இந்து மேல்நிலைப் பள்ளி மையத்தில் நடைபெற உள்ளது. சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்ளாதவர்களுக்கு மீளவும் வாய்ப்பு ஏதும் அளிக்கப்பட மாட்டாது.

இப்பட்டியல், பணிநாடுநர்கள் விண்ணப்பங்களில் தெரிவித்திருந்த விவரங்களின் அடிப்படையில் மிகுந்த கவனத்துடன் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பட்டியலில் தவறுகள் ஏதேனும் கண்டறியப்படின் திருத்தத்திற்கு உட்பட்டது. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுதல் என்பது வேலைவாய்ப்பிற்கு உத்திரவாதம் அளிப்பதாக அமையாது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**